சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:10.07.2023

வா.சா.1 –முருகவேல் த/பெ – பாலு

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நானும், 1ம் பிரதிவாதியும் ஒரே அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டோம் என்றால் சரிதான். நான் ரூ.5,00,000/– த்தை 10.04.2017ம் தேதி தேவிபாலா பத்திர எழுத்தர் அலுவலகம் அருகே வைத்து கொடுத்தேன். ரூ.5,00,000/–த்தையும் ரூ.500/– நோட்டுகளாக கொடுத்தேன். நான் ரூ.5,00,000/–த்தை 2, 3 மாதங்களாக வாடகை, ஓய்வூதியம் ஆகியவை மூலமாக சேமித்து வைத்திருந்தேன். 1ம் பிரதிவாதி 30.01.2020ம் தேதி விருப்ப ஓய்வு பெற்றுவிட்டார். 1ம் பிரதிவாதி ஓய்வு பெறும் போது பணி ஓய்வு பணபலன்கள் அனைத்தும் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். உண்மையில் பணபலன்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பெற்றுவிட்டதால் என்னிடம் கடன் திருப்பி கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. அந்த எதிர்வழக்குரையில் தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்று எதிர்வாதம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் அவருடையதுஎன்பதை நிரூபிக்க நான் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை, தேவையென்றால் அவர் எடுக்கட்டும். மேல்நடவடிக்கை எடுத்ததால் தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் நான்

மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கந்துவட்டி தொழில் செய்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே என் மீது கந்துவட்டி தொழில் செய்ததாக காவல்துறையில் புகார்கொடுத்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் கந்து வட்டி தொழிலுக்காக அல்ல, என்னிடம் வாங்கிய கடனை திருப்பி தரக்கூடாது என்று ஏமாற்றுவதற்காக கொடுத்தார்கள். ரூ.5,00,000/—த்தை நான் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் முருகன், முருகேஸ்வரி, ராஜகுமார் மற்றும் பெருமாளின் மனைவி ஆகியோர் இருந்தார்கள். 1ம் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும், என்னுடன் வேலை பார்ப்பதால் அவருடைய கையெழுத்து எனக்கு தெரியும் என்றும், அதை வைத்து நானே மோசடியாக அவருடைய கையெழுத்தை போட்டு தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.